1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்படும்போது மதத் தலைவர்கள் சொல்லிய நல்ல கருத்துக்களைத்தான் உபயோகப்படுத்துகிறார்களே தவிர, மதத்தைப் பரப்புகின்ற அடிப்படையிலே அவ்வாறு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள்.

* வினா எண் 107—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாத உயர்தர ஆரம்பப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அப்பள்ளிகளில் உடனடியாக பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;

(அ) 33

(ஆ) உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு புதிதாக பட்டதாரி தலைமை ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவது குறித்து இனி வரும் ஆண்டுகளில் நிதி நிலையில் அனுசரித்து அரசு ஆய்வு செய்யும். அவ்வாறு பதவிகள் ஏற்படுத்தப்பட்டால் நீலகிரி மாவட்டத்திலுள்ள உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும் உரிய பங்கு கிடைக்கும்.

திருப்பத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி.

* வினா எண் 108—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தை நகராட்சிக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) எப்போது முதல் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) நிதி நிலையில் பின் தங்கிய நகராட்சிகளின்றும் அரசு எடுத்துக்கொண்ட 17 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியும் ஒன்றாகும். அப் பதினேழு உயர்நிலைப் பள்ளிகளையும் அரசே நடத்த முடிவு செய்யப்பட்டு அவ்வாறே ஆணையிடப் பட்டுள்ளது. எனவே, அப்பள்ளிகளில் அரசு நிர்வாகத்தின்கீழ் இயங்கும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.